|b09291 45oaksdF (English)

|c09291_000_45oaksd.xml (Task 178322)

|v1

ஞாயிறு காலைக் கூட்டம்

|v2

பொது மாநாடு

|v3

ஞாயிறு காலைக் கூட்டம்

|v4

அக்டோபர் 3, 2010

|v5

இரண்டு தொடர்புக்கான வழிகள்

|v6

வெளிப்படுத்தல்

|v7

ஜெபம்

|v8

ஆசாரியத்துவம்

|v9

பரிசுத்த ஆவி

|v10

சபை நிர்வாகம்

|v11

இரண்டு தொடர்புக்கான வழிகள்

|v12

மூப்பர் டாலின் ஹெச்.ஓக்ஸ்

|v13

பன்னிரு அப்போஸ்தலர் குழுமம்

|v14

வளர்ச்சியை அடைய சரியான சமத்துவத்தில் தனிப்பட்ட வழியையும் ஆசாரி யத்துவ வழியையும் நாம் பயன்படுத்தவேண்டும், அதுவே அநித்திய வாழ்வின் நோக்கமாகும்.

|v15

நமது பரலோகப் பிதா அவரது பிள்ளைகளுடன் தொடர்பு கொள்ள, தனிப்பட்ட வழி மற்றும் ஆசாரியத்துவ வழி என நாம் அழைக்கிற இரண்டு வழிகளைக்கொடுத்திருக்கிறார். அத்தியாவசியமான இந்த இரண்டு தொடர்பின் வழிகளை அனைவரும் புரிந்துகொள்ளவேண்டும், அவற்றால் வழிநடத்தப்படவேண்டும்.

|v16

I. *தனிப்பட்ட வழி*

|v17

*தனிப்பட்ட வழியில் நமது பரலோகப் பிதாவிடம் நாம் நேரடியாக ஜெபிக்கிறோம். எந்தவித மத்தியஸ்தருமில்லாமல் அவர் ஏற்படுத்தியிருக்கிற வழிகளால் அவர் நமக்கு பதிலளிக்கிறார். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், நமது பரலோகப் பிதாவிடம் நாம் ஜெபிக்கிறோம், அவரது பரிசுத்த ஆவியின் மூலமாகவும் பிற வழிகளிலும் அவர் நமக்கு பதிலளிக்கிறார். சத்தியத்திற்குள் நம்மை வழிநடத்தவும் (யோவான் 15:26; 2நெப்பி 31:18; 3நெப்பி 28:11பார்க்கவும்), நாம் செய்யவேண்டிய சகல  காரியங்களையும் நமக்குக் காட்டவும் (2நெப்பி 32:5 பார்க்கவும்), பிதாவையும் குமாரனையும் சாட்சி கொடுக்கிறதே பரிசுத்த ஆவியின் ஊழியம் (யோவான் 14:26; 16:13 பார்க்கவும்). பரிசுத்த ஆவியின் மூலமாக நமது பரலோகப் பிதாவுடன் இந்த தனிப்பட்ட தொடர்பின் வழி சத்தியத்தின் நமது சாட்சியின், நமது அறிவின், ஒரு  நேசமுள்ள பரலோகப் பிதாவிடமிருந்து வருகிற நமது தனிப்பட்ட வழிநடத்துதலின் ஆதாரமாயிருக்கிறது. அதன் சத்தியத்தின் ஒரு சொந்த சாட்சியை பெறுவதற்கு அவரது பிள்ளைகள் ஒவ்வொருவரையும் அனுமதிக்கிற அவரது அற்புதமான சுவிசேஷத் திட்டத்திற்கு அது ஒரு அத்தியாவசியமான பகுதியாகும்.*

|v18

*பரிசுத்த ஆவியின் மூலமாக நமது பரலோகப் பிதாவிடம் நேரடியான தனிப்பட்ட தொடர்பின் வழி தகுதியின் அடிப்படையிலிருக்கிறது. ஒவ்வொரு ஓய்வு நாளிலும் திருவிருந்தில் பங்கேற்பதால் நமது உடன்படிக்கைகளை புதுப்பிக்க நாம் கட்டளையிடப்பட்டிருப்பதால் அது மிக அத்தியாவசியமாயிருக்கிறது. நம்மை வழிநடத்த, அவருடைய ஆவியை நாம் எப்பொழுதும் நம்மோடே கொண்டிருக்க கொடுக்கப்பட்டிருக்கிற வாக்களிப்புக்கு இந்த வழியில் நாம்*

தகுதியுள்ளவர்களாகிறோம்.

|v19

கர்த்தருடன் தனிப்பட்ட தொடர்பின் இந்த வழியைப் பொறுத்தளவில், தேவ னுக்கு மனிதனுக்குமிடையில் மனித மத்தியஸ்தர் அவசியமில்லாததென வலி யுறுத்துகிற அந்த கிறிஸ்தவர்களைப் போலவே நமது நம்பிக்கையும் பழக்கமு மிருக்கிறது. ஏனெனில் மார்டின் லூத்தர் ஆதரித்து இன்று "அனைத்து விசுவா சிகளின் ஆசாரியத்துவமாக" அறியப்பட்டிருக்கிற கொள்கையின்கீழ் தேவனி டம் எல்லோருக்குமே நேரடியான தொடர்பிருக்கிறது. அதைப்பற்றி அதிகமா க பின்னர் நான் சொல்வேன்.

|v20

தனிப்பட்ட தீர்மானங்களிலும் குடும்பத்தை நிர்வகிப்பதிலும் தனிப்பட்ட வழி க்கு மிகஅதிக முக்கியத்துவமிருக்கிறது. துரதிருஷ்டவசமாக, நம் சபை அங்கத் தினர்களில் சிலர் இந்த நேரடி மற்றும் தனிப்பட்ட வழியின் அவசியத்தை கு றைவாக மதிப்பிடுகிறார்கள். தீர்க்கதரிசன தலைமை நிச்சயமாக முக்கியமான தாயிருப்பதால், அடிப்படையில் சபைக் காரியங்களில் பரலோக உரையாட லை நிர்வகிக்க செயல்படுகிற ஆசாரியத்துவ வழியை, தங்களின் நேரடி வழியி ன் மூலமாக உணர்த்துதலால் தாங்களே எடுக்கவேண்டிய தீர்மானங்களை, அ ந்த தனிப்பட்ட தீர்மானங்களை அவர்களுக்காக தங்கள் ஆசாரியத்துவத் தலை வர்கள் எடுக்க சிலர் நாடுகிறார்கள். தனிப்பட்ட தீர்மானங்களும் குடும்ப நிர் வாகமும் அடிப்படையில் தனிப்பட்ட வழிக்கான ஒரு காரியம்.

|v21

நமது பரலோகப் பிதாவுடன் இந்த விலையேறப்பெற்ற நேரடி தனிப்பட்ட வ ழிக்கு சம்பந்தப்பட்டதில் நாம் நினைவு வைத்திருக்க வேண்டிய இரண்டு பிற எச்சரிக்கைகளை நான் சேர்க்க நினைக்கிறேன்.

|v22

முதலாவதாக, ஆசாரியத்துவத்தின் வழியில் தனிமையாக அதன் பரிபூரணத்தி ல் தனிப்பட்ட வழி தனியாக செயல்படுவதில்லை. தேவனிடமிருந்து மனிதனு க்கு தொடர்பு ஏற்படுத்துகிறவைகளான பரிசுத்த ஆவியின் வரம், ஆசாரியத்து வத் திறவுகோல்களைத் தரித்திருக்கிறவர்களால் அதிகாரமளிக்கப்பட்டிருக்கிற ஆசாரியத்துவ அதிகாரம் கொண்டவர்களால் அருளப்படுகிறது. வெறும் வா ஞ்சையினாலோ அல்லது நம்பிக்கையாலோ அது வருவதில்லை. இந்த ஆவியி

ன் நிரந்தரமான துணைக்கான உரிமைக்கு, ஒவ்வொரு ஓய்வுநாளிலும் திருவிரு ந்தில் தகுதியுள்ளவர்களாக நாம் பங்கேற்கும்போதும், கீழ்ப்படிதலுக்கும் சேவைக்கும் நமது ஞானஸ்நான உடன்படிக்கைகளை புதுப்பிக்கும்போதும் பிரமாணம் எடுப்பது அவசியமாயிருக்கிறது.

|v23

அதைப்போன்றே, நாம் கீழ்ப்படியாதிருந்தால் அல்லது ஆசாரியத்துவ வழியுடன் நாம் இணக்கமில்லாதிருந்தால் தனிப்பட்ட நேரடி வழியின் மூலமாக நம்பிக்கையுடன் நாம் தொடர்பு கொள்ள முடியாது. நீதியின்கொள்கைகளைப் பயன்படுத்துவதால் மட்டுமே பரலோகத்தின் வல்லமைகள் கட்டுப்படுத்தப்படுவதில்லை அல்லது கையாளப்படுவதில்லை என கர்த்தர் அறிவிக்கிறார் (கோ.உ **121:36** பார்க்கவும்). துரதிருஷ்டவசமாக, சில கட்டளைகளுக்கு கீழ்ப்படியாதிருக்கவும் அல்லது சில ஆலோசனையைப் பின்பற்றாதிருக்கவும் அவர்கள் அனுமதிக்கப்பட்டிருக்கிறதாக தேவன் அவர்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார் என அறிக்கையிட தேவனின் கட்டளைகளை மீறுகிற அல்லது தங்களின் ஆசாரியத்துவத் தலைவர்களின் ஆலோசனைக்கு கீழ்ப்படியாதிருக்கிறவர்களுக்கு துரதிருஷ்டவசமாக இது பொதுவாக இருக்கிறது. இத்தகையவர்கள் வெளிப்படுத்துதலை அல்லது உணர்த்துதலைப் பெறலாம், ஆனால் அது அவர்கள் நினைக்கிற ஆதாரத்திலிருந்தல்ல. பிசாசானவன் பொய்களின் பிதாவாக இருந்து, தனது புத்திசாலித்தனமான போலித்தனத்தால் தேவனின் செயல்களை நாசப்படுத்த அவன் எப்போதுமே ஆர்வமுள்ளவனாயிருக்கிறான்.

|v24

II. ஆசாரியத்துவ வழி

|v25

பரிசுத்த ஆவியின் மூலமாக நம்முடன் நமது பரலோகப் பிதா நேரடியாக தொடர்பு கொள்கிற நேரடி வழியைப் போலல்லாமல், ஆசாரியத்துவ தொடர்பின் வழிக்கு கூடுதலான மற்றும் நமது இரட்சகரான இயேசு கிறிஸ்துவுக்கும், அவரது சபைக்கும், அவர் ஏற்படுத்திய தலைவர்களுக்கும் அவசியமான நல்லெண்ணத் தூதாகவுமிருக்கிறது.

|v26

அவரது பாவநிவர்த்தியின் பலியால் அவர் நிறைவேற்றியதால், அவரது பாவநி

வர்த்தியின் ஆசீர்வாதங்களுக்கு தகுதியாயிருக்க நாம் நிறைவேற்றவேண்டிய நிபந்தனைகளை ஏற்படுத்த இயேசு கிறிஸ்துவுக்கு அதிகாரமிருக்கிறது. அதனால்தான் நமக்கு கட்டளைகளும் நியமங்களுமிருக்கின்றன. அதனால்தான் நாம் உடன்படிக்கைகளைச் செய்கிறோம். அவ்வாறுதான் வாக்களிக்கப்பட்ட ஆசீர்வாதங்களுக்கு நாம் தகுதியடைகிறோம். "நம்மால் முடிந்த எல்லாவற்றையும் செய்த பின்னர்" (2நெப்பி 25:23), இஸ்ரவேலின் பரிசுத்தரின் இரக்கத்தால், கிருபையால் அவைகள் அனைத்தும் வருகின்றன.

|v27

அவரது பூலோக ஊழியத்தின்போது அவரது நாமத்தைத் தரித்திருக்கிற ஆசாரியத்துவ அதிகாரத்தை அவர் அருளி, அவரது நாமத்தைத் தரித்திருக்கிற ஒரு சபையையும் அவர் நிறுவினார். இந்த கடைசி நாட்களில் அவரது ஆசாரியத்துவ அதிகாரம் மறுஸ்தாபிக்கப்பட்டு, தீர்க்கதரிசி ஜோசப் ஸ்மித்துக்கு வானுலக தூதுவர்களால் பணிவிடை செய்யப்பட்டு அவரது சபையும் மீண்டும் நிர்வகிக்கப்பட்டது. இந்த மறுஸ்தாபிக்கப்பட்ட ஆசாரியத்துவமும் இந்த மீண்டும் நிர்வகிக்கப்பட்ட சபையும் ஆசாரியத்துவ வழியில் முக்கியமானவையாயிருக்கின்றன.

|v28

கடந்த காலத்தில் வேதங்களின் மூலமாக அவரது பிள்ளைகளிடத்தில் தேவன் பேசிய வழியே ஆசாரியத்துவ வழி. இந்த வழி மூலமாகவே, ஜீவிக்கிற தீர்க்கதரிசிகள், அப்போஸ்தலர் மற்றும் உணர்த்தப்பட்ட பிறதலைவர்களின் போதனைகள் மற்றும் ஆலோசனைகள் மூலமாக இப்போதும் அவர் பேசுகிறார். இந்த வழியிலேயே தேவையான நியமங்களை நாம் பெறுகிறோம். இந்த வழியிலேயே அவரது சபையில்சேவைசெய்ய நாம் அழைப்புகளைப் பெறுகிறோம். அவரது சபையே வழியும் அவரது ஆசாரியத்துவ வல்லமையுமாயிருக்கிறது. அதன் மூலமாகவே, கர்த்தரின் பணியை நிறைவேற்றுவதற்காக அத்தியாவசியமாயிருக்கிற அந்த ஒன்றுபட்டு செய்யும் செயல்களில் பங்கேற்க நாம் சிலாக்கியமுள்ளவர்களாயிருக்கிறோம். சுவிசேஷத்தைப்பிரசங்கித்தல், ஆலயங்களையும் ஜெபக்கூடங்களையும் கட்டுதல், வறுமையிலிருப்போருக்கு உதவுதல், இந்த ஒன்றுபட்டு செய்யும் செயல்களில் அடங்கும்.

|v29

அதிகாரம் பெற்ற நியமங்கள் (திருவிருந்துகள்) அத்தியாவசியமானவை என்றும் இயேசு கிறிஸ்துவால் (யோவான் 15:16 பார்க்கவும்) அதிகாரமளிக்கப்பட்ட, உரிமையளிக்கப்பட்ட ஒருவரால் நடத்தப்படவேண்டுமென்றும் சில கிறிஸ்தவர்கள் வலியுறுத்துவதற்கு, இந்த ஆசாரியத்துவ வழியைப்பற்றிய நமது நம்பி

*க்கையும் பழக்கமும் ஒத்திருக்கின்றன. அதையே நாமும் நம்புகிறோம், ஆனால் அந்த அதிகாரத்தை நாம் எவ்வாறு பெறுகிறோம் என்பதில் நாம் பிற கிறிஸ்தவர்களோடு வேறுபடுகிறோம்.*

|v30

*ஆசாரியத்துவ வழியின் முக்கியத்துவத்தை அடையாளம்காண, நமது சபையின் சில அங்கத்தினர்கள் அல்லது முந்தைய அங்கத்தினர்கள் தவறிவிட்டார்கள் . சபையின், அதன் தலைவர்களின், அதன் நிகழ்ச்சிகளின் முக்கியத்துவத்தை அவர்கள் குறைவாக எடைபோட்டுவிட்டார்கள். தனிப்பட்ட வழியையே முழுவதுமாக சார்ந்திருந்ததில், அவர்கள் தங்கள் சொந்த வழியில் போய், கோட்பாட்டை விளக்குவதாக உரிமை பாராட்டி, தீர்க்கதரிசி-தலைவர்களின் போதனைகளுக்கு எதிரான போட்டியான சபைகளுக்கு நடத்தப்பட்டார்கள். இந்த வழியில் “ஒழுங்குபடுத்தப்பட்ட மதம்” என அழைக்கப்படுகிறதென தற்கால ஏளனத்தை அவர்கள் காட்டுகிறார்கள். ஒழுங்குபடுத்தப்பட்ட மதத்தின் தேவையை மறுக்கிறவர்கள், அவரது சபையையும், அதன் பழங்காலத்தின் தலைவர்களையும் நிர்வகித்தவரான, தற்காலத்தில் அவர்களை மீண்டும்நிர்வகித்தவருமான போதகரின் பணியை மறுக்கிறார்கள்.*

|v31

*அப்போஸ்தலனாகிய பவுல் போதித்ததைப்போல, தெய்வீக அதிகாரத்தால் நிர்வகிக்கப்பட்ட ஒழுங்குபடுத்தப்பட்ட மதம் அத்தியாவசியமாயிருக்கிறது.*

|v32

*“நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும்வரை,*

|v33

*“பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காக ஏற்படுத்தினார்” (எபேசியர் 4:12--13).*

|v34

*கர்த்தரின் ஊழியக்காரர்களின் குரல் கர்த்தரின் குரல் என்ற தற்கால வெளிப்ப டுத்துதல் கர்த்தரின் அறிக்கை என்பதை நாம் அனைவரும் நினைவுகூறவேண் டும் (கோ.உ 1:38; 21:5; 68:4 பார்க்கவும்).*

|v35

*முக்கியமான ஆசாரியத்துவ வழியில் நம்பகத்தன்மையுடன் சேர்ந்திருக்கிற நா ம் நினைவுகூறவேண்டிய இரண்டு எச்சரிக்கைகளை சேர்க்க நான் விரும்புகிறே ன்.*

|v36

*முதலாவதாக, ஆசாரியத்துவ வழி தனிப்பட்ட வழிக்கான தேவையை நீக்கிவி டாது. சத்தியத்தின் ஒரு தனிப்பட்ட சாட்சி நம் அனைவருக்கும்வேண்டும். ந மது விசுவாசம் அதிகரிக்கும்போது, பெற்றோர், ஆசிரியர்கள், அல்லது ஆசாரி யத்துவத் தலைவர்கள் போன்ற பிறரின் வார்த்தைகளையும் விசுவாசத்தையும் நாம் சார்ந்திருப்பது அவசியமாயிருக்கிறது (கோ.உ 46:14 பார்க்கவும்). ஆனா ல் தனிப்பட்ட வழியின் மூலமாக அந்த சாட்சியைப் பெறுவதற்குப் பதிலாக குறிப்பிட்ட ஒரு ஆசாரியத்துவத் தலைவர் அல்லது ஆசிரியரை மட்டுமே மு ழுமையாக நாம் சார்ந்திருந்தால், அவரின் செயலால் நம்பிக்கையை இழக்க எ ன்றென்றைக்கும் நாம் அபாயத்திலிருப்போம். சத்தியத்தின் ஒரு முதிர்ச்சியான ஞானத்தை அல்லது சாட்சியை அடைவதில் நமக்கும் நமது பரலோகப் பிதா வுக்கும் நடுவில் ஒரு மனித மத்தியஸ்தரை நாம் சார்ந்திருக்கக் கூடாது.*

|v37

*இரண்டாவதாக, தனிப்பட்ட வழியைப்போல, நாம் தகுதியாயும் கீழ்ப்படித லுமாயில்லாதவரை நமது பலனுக்காக ஆசாரியத்துவ வழி முழுமையாகவும் ச ரியாகவும் செயல்படுவதில்லை. தேவனின் கட்டளைகளை மீறுதல்களில் நாம் உறுதியாயிருந்தால் நாம் “அவரது  சமுகத்திலிருந்துஅறுப்புண்டு போவோம்” (ஆல்மா 38:1) என அநேக வேதங்கள் போதிக்கின்றன. அது நடைபெறும்போ து, கர்த்தரும் அவரது ஊழியக்காரர்களும் ஆவிக்குரிய உதவியை நமக்குக் கொடுப்பதில் வெகுவாக கட்டுப்படுத்தப்படுவார்கள், நாமே அதை அடைய வும் முடியாது.*

|v38

*கர்த்தரின் ஊழியக்காரர்கள் பரிசுத்த ஆவியுடன் தொடர்புகொள்ள தயாராயிருந்ததன் ஒரு தெளிவான எடுத்துக்காட்டை சரித்திரம் நமக்களிக்கிறது. இளம் தீர்க்கதரிசியான ஜோசப் ஸ்மித் கோபத்தில் அல்லது கவலையிலிருக்கும்போது அவரால் மொழிபெயர்க்க முடியவில்லை.*

|v39

*டேவிட் விட்மர் நினைவுகூர்கிறார்: "ஒரு நாள் காலையில் மொழிபெயர்ப்பை அவர் தொடர ஆரம்பித்தபோது, வீட்டில் ஒரு பிரச்சினை ஏற்பட்டது, அதைப்பற்றி அவர் கவலையடைந்தார். அந்த பிரச்சினை அவரது மனைவி எம்மாவால் ஏற்பட்டது. ஆலிவரும் நானும் மாடிக்குச் சென்றோம், மொழிபெயர்ப்பைத் தொடர விரைவிலேயே ஜோசப் மேலே வந்தார், ஆனால் அவரால் எதையும் செய்ய முடியவில்லை. ஒரு வார்த்தையைக்கூட அவரால் மொழிபெயர்க்க முடியவில்லை. அவர் கீழே இறங்கி வந்து தோப்பிற்குள் போய் கர்த்தரிடம் ஜெபித்தார்; ஒரு மணி நேரத்திற்கு அது நடந்து, வீட்டிற்கு திரும்ப வந்து, எம்மாவிடம் மன்னிப்புக் கேட்டார். பின்னர் நாங்களிருந்த மாடிக்கு அவர் வந்து மொழிபெயர்ப்பு நல்ல முறையில் தொடர்ந்தது. அவர் தாழ்மையாயும் உண்மையாயும் இருக்கும்வரை அவரால் எதையும் செய்ய முடியவில்லை."1*

|v40

III. *இரண்டு வழிகளுக்குமான அவசியம்*

|v41

*அவரது பிள்ளைகளுடம் நமது பரலோகப் பிதா தொடர்புகொள்ள அமைத்த இரண்டு வழிகளின் தேவையைப்பற்றிய கூடுதலான எடுத்துக்காட்டுகளுடன் நான் முடித்துக்கொள்கிறேன். அவரது பிள்ளைகளுக்கு அநித்தியத்தையும் நித்திய ஜீவனையும் கொண்டுவருவதற்கான அவரதுநோக்கத்தை நிறைவேற்ற இரண்டும் அத்தியாவசியமானவை. மோசே அளவுக்கதிகமாக முயற்சிக் கூடாதென்ற தகப்பனாகிய எத்திரோவின் ஆலோசனையே இந்த தேவையின் பழங்காலத்து வேதக்குறிப்பு. "தேவனைப்பற்றி விசாரிக்கவும்" (யாத்திராகமம் 18:15)"ஒருவருக்கொருவருக்குள்ள வழக்கைத் தீர்க்கவும்" (வசனம் 16) காலையிலிருந்து இரவுவரை தங்களின் ஆசாரியத்துவத் தலைவர்களுக்காக மக்கள் காத்திரு*

*ந்தனர். தனிப்பட்ட பிரச்சினைகளைத் தீர்க்க அதிபதிகளை நியமிக்கச் சொன்னதில் மோசேக்கு எவ்வாறு எத்திரோ ஆலோசனையளித்தான் என்பதை நாம் எப்போதும் கவனிக்கிறோம் (வசனங்கள் 21--22 பார்க்கவும்). ஆனால் தனிப்பட்ட வழியின் முக்கியத்துவத்தை விவரிக்கிற ஆலோசனையையும் மோசேக்கு எத்திரோ கொடுத்தான். "கட்டளைகளையும் பிரமாணங்களையும் அவர்களுக்கு வெளிப்படுத்தி, அவர்கள் நடக்க வேண்டிய வழியையும், அவர்கள் செய்யவேண்டிய காரியத்தையும் அவர்களுக்குத் தெரியப்படுத்தும்" (வசனம் 20;* emphasis added *).*

|v42

*வேறு அர்த்தத்தில், தங்கள் ஆசாரியத்துவத் தலைவர்களிடம் எல்லா பிரச்சினைகளையும் கொண்டுவரக் கூடாதென இஸ்ரவேலின் மக்களுக்குப் போதிக்கப்படவேண்டும். கட்டளைகளை அவர்கள் புரிந்துகொண்டு தாங்களே தங்களுடைய அநேக பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ள உணர்த்துதலை நாடவேண்டும்.*

|v43

*இரண்டு வழிகளுக்கான தேவையை, சமீபத்தில் சிலி நாட்டில் நடந்த சம்பவங்கள் விவரிக்கின்றன. சிலியில் மிகமோசமான பூகம்பம் ஏற்பட்டது. நமது சபை அங்கத்தினர்களில் அநேகர் தங்கள் வீடுகளை இழந்தனர், சிலர் தங்கள் குடும்பத்தாரை இழந்தனர். அநேகர் தன்னம்பிக்கையை இழந்தனர். இத்தகைய அழிவுகளுக்கு உதவ நமது சபை ஆயத்தமாயிருப்பதால், உணவு, உறைவிடம், பிற பொருட்களுக்கான உதவி உடனடியாகக் கொடுக்கப்பட்டது. கர்த்தரின் சபை மற்றும் அதன் தலைவர்கள் செய்த பொருட்களின் உதவியின் மூலமாக அவரின் குரலை சிலியின் பரிசுத்தவான்கள் கேட்டனர். ஆனால், ஆசாரியத்துவ வழி எவ்வாறு செயல்பட்டாலும்கூட அது போதுமானதாயிருக்கவில்லை. நாடுகிறவர்களுக்கு, செவிகொடுப்பவர்களுக்கு பரிசுத்த ஆவியின் மூலமாக வருகிற ஆறுதலின் வழிநடத்துதலின் நேரடி செய்தியை பெற ஜெபத்தில் ஒவ்வொரு அங்கத்தினரும் கர்த்தரைத் தேடவேண்டும்*

|v44

*இரண்டு வழிகளுக்கும் தேவையான மற்றொரு எடுத்துக்காட்டு நமது ஊழியப் பணி. ஆசாரியத்துவ வழியின் மூலமாக அவர்கள் பெற்றுக் கொண்ட போதனைகளாலும், தனிப்பட்ட வழியின் மூலமாக அவர்கள் பெற்றுக்கொண்ட சாட்சியாலும் ஊழியக்காரர்களாயிருக்க அழைக்கப்பட்ட ஆண்களும் பெண்களும் தகுதியுள்ளவர்களாயும் வாஞ்சையுள்ளவர்களுமாயிருக்கிறார்கள். ஆசாரியத்துவ வழியின் மூலமாக அவர்கள் அழைக்கப்படுகிறார்கள். பின்னர், கர்த்த*

ரின் பிரதிநிதிகளாகவும் அவரது ஆசாரியத்துவ வழியின் கீழும், விசாரிப்பவர்களுக்கு அவர்கள் போதிக்கிறார்கள். சத்தியத்தை உண்மையாகத் தேடுகிறவர்கள் செவிகொடுத்து, தனிப்பட்ட வழியின் மூலமாக செய்தியின் சத்தியத்தை தாங்களே அறிந்துகொள்ள ஜெபிக்கும்படி ஊழியக்காரர்கள் அவர்களை ஊக்குவிக்கிறார்கள்.

|v45

குடும்பத்திலும் சபையிலும் ஆசாரியத்துவ அதிகாரத்தின் காரியத்திற்குஇந்த கொள்கைகள் எவ்வாறு பொருந்துகிறதென்பதற்கு இறுதியான ஒரு எடுத்துக்காட்டு.2 பொருத்தமான ஆசாரியத்துவத் திறவுகோல்களை தரித்திருக்கிறவரின் வழிநடத்துதலின் கீழ் சபையில் அனைத்து ஆசாரியத்துவ அதிகாரங்களும் செயல்படுத்தப்படுகின்றன. இது ஆசாரியத்துவ வழி. ஆனால், தகப்பனோ அல்லது கணவனை இழந்த தாயோ, குடும்பத்தில் அதிகாரம் கொண்டவர், ஆசாரியத்துவ திறவுகோல்களைத் தரித்திருக்கிற யாரிடமிருந்தும் அதிகாரம் பெறத் தேவையில்லாமல், குடும்ப காரியங்களில் செயல்படுகிறார். அது தனிப்பட்ட வழியைப்போல. நமக்கு வளர்ச்சி வேண்டுமென்றாலும், அவரது பிள்ளைகளுக்கான நமது பரலோகப் பிதாவின் திட்டத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற இறுதியான ஆசீர்வாதங்களை அடையவேண்டுமென்றாலும், இரண்டு வழிகளுமே நமது குடும்ப வாழ்வில் செயல்படவேண்டும்.

|v46

அநித்திய வாழ்வின் நோக்கமான வளர்ச்சியை அடைய, தனிப்பட்ட வழி, ஆசாரியத்துவ வழி இரண்டையும் நாம் சரியான அளவில் சமமாகப் பயன்படுத்தவேண்டும். முழுவதுமாக தனிப்பட்ட வழியின்மீது சொந்த மதப்பழக்கங்கள் சார்ந்திருந்தால் தனிப்பட்டவர்களின் முக்கியத்துவம் தெய்வீக அதிகாரத்தை அகற்றிவிடுகிறது. சொந்த மத பழக்கம் ஆசாரியத்துவ வழியின்மீது அதிகமாய் சார்ந்திருந்தால், தனிப்பட்ட வளர்ச்சி பாதிக்கப்படுகிறது. தங்களின் நித்திய இலக்கை அடைய தேவனின் பிள்ளைகளுக்கு இரண்டு வழிகளுமே தேவையாயிருக்கிறது. மறுஸ்தாபிக்கப்பட்ட சுவிசேஷம் இரண்டையும் போதிக்கிறது, மறுஸ்தாபிக்கப்பட்ட சபை இரண்டையும் கொடுக்கிறது

|v47

ஆசாரியத்துவ வழியை அரசாளுகிற திறவுகோல்களைத் தரித்திருக்கிற கர்த்தரின் தீர்க்கதரிசியான தலைவர் தாமஸ் எஸ்.மான்சனைக் குறித்து நான் சாட்சியளிக்கிறேன். இந்த சபைக்குரியவரான கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்து சாட்சியளிக்கிறேன். நமது பரலோகப் பிதாவின் விலைமதிப்புள்ள தனிப்பட்ட வழியின் மூலமாக தாம் ஒவ்வொருவருக்கும் அறிந்துகொண்ட மறுஸ்தா

பிக்கப்பட்ட சுவிசேஷத்தைக் குறித்து நான் சாட்சியளிக்கிறேன். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஆமேன்.

|v48

குறிப்புகள்

|v49

1.

|v50

|v51

2.

|v52

Dallin H. Oaks, “Priesthood Authority in the Family and the Church,” *Liahona,* Nov. 2005, 24–27பார்க்கவும்.

|v53

 லியஹோனா

|v54

நவம்பர் 2010